# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

21—5—72

★

உள்ளே......

விடிவெள்ளி
தோன்றும் நாள்...?
(தலையங்கம்)

★

காவியக் கனல்
(இலக்கியம்)

★

இராசாசியும்,
சோசலிஷமும்
(கட்டுரை)

★

நாய் வால் நிமிருமா?
(சிறுகதை)

விலை 25 காசு

மன்னார்குடி மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் படத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய தந்தை பெரியாருடன் கலைஞர்

# கென்னடி அல்ல - நிக்சன்!

அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் ரஷ்யாவுக்கு இம்மாதம் 22ம் தேதி விஜயம் செய்வதாய் இருந்தது. வடவியட்நாமில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள முற்றுகையை அகற்ருவிடில் நிக்சன் ரஷ்யா நிபந்தனை போட்டது ரஷ்யாவின் பதிலடியினுல்அமெரிக்கா சுருதிஇறங்கி வட வியட்நாமில் தனது கடற்படை முற்றுகையை நீக்கிவிட்டது.

இம்மாதம் 22-ஆம் தேதி அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் ரஷ்யாவிற்கு அதிகார பூர்வமாக விஜயம் செய்வதாக இருந்தது. புதன் கிழமையிலிருந்து வெள்ளி முடிய மூன்று நாட்கள் அமெரிக்கா வட வியட்நாமில் ஹைபாங் துறைமுகம் உட்பட பல துறைமுகங்களை முற்றுகையிட்டு ரஷ்யக் கப்பல்களை தடுத்து வந்தது. கண்ணிவெடிகளை வைத்தும் மிரட்டி வந்தது.

அமெரிக்காவுக்கு கெடு விதித்து ரஷ்யா பெரும் நிபந்தனையொன்று விதித்தது. இம்மாதம் 17-ஆம் தேதிக்குள் அமெரிக்கா வடவியட்நாம்துறைமுகங்களில் மேற்கொண்டிருக்கும் முற்றுகை நடவடிக்கைகளை அகற்றி கண்ணிவெடிகளையும் நீக்கவேண்டும். இல்லையேல் நிக்சன் இம்மாதம் 22-ஆம் தேதி ரஷ்யாவுக்கு வரக்கூடாது என்று ரஷ்யா நிபந்தனை விதித்தது.

ரஷ்யாவின் கெடுவுடன் கூடிய நிபந்தனைக்கு அமெரிக்கா பணிந்து தனது சுருதியைக் குறைத்துக் கொண்டது மூன்று நாட்களாக மேற் கொண்ட முற்றுகையை அமெரிக்கா தளர்த்தியதோடல்லாமல் கண்ணி வெடிகளையும் நீக்கிவிட்டது. ரஷ்யாவின் பதிலடிக்கு அமெரிக்கா பணிந்தது. வியட்நாம் நெருக்கடியில் மிகப் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க போர் விஸ்தரிப்பை மேற் கொண்டிருக்கும் இந்த

---

**கொரியாப் போரின்போது, அமெரிக்க அதிபராக இருந்த கென்னடிக்கும், ரஷிய அதிபராக இருந்த குருசோவுக்கும் ஒரு சோதனை நடந்தது. அதிலே கென்னடியின் அறைகூவல் பொருள் படைத்ததாயிருந்தது. ஆனல் இன்றைய நிக்சனின் கண்ணிவெடி விளையாட்டு, கண்ணும்பூச்சி விளையாட்டாகி விட்டது என்பதை விளக்குகிறது இக் கட்டுரை!**

---

நேரத்தில் ரஷ்யா வரும் நிக்சனை ரஷ்யத் தலைவர்கள் வரவேற்பார்களா என்ற சந்தேகம் சில நாட்களாக அடிபட்டு வந்தது. ரஷ்யாவின் நிபந்தனையை ஜப்பான் ஒலிபரப்பு கார்ப்பரேஷன் ஒலிபரப்பியது. ரஷ்யாவின் மேற்கண்ட முக்கியத்துவம் பெற்ற நிபந்தனையும் ஏனைய நிபந்தனைகளும் அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தப்பட்டு விட்டதாகவும் ஜப்பான் ஒலிபரப்பு அறிவித்தது. இந்த நிபந்தனைகளுக்கு பதிலளிக்க அமெரிக்காவுக்கு ரஷ்யா இம்மாதம் 17-ஆம் தேதிவரை காலக்கெடு விதித்துள்ளது எனவும் ஜப்பான் ஒலிபரப்பு கூறியது.

ரஷ்யாவின் நிபந்தனைகளை அமெரிக்க ஜனாதிபதி நிக்சனிடம் அறிவித்தது யார் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. கடந்த புதன்கிழமையன்று ரஷ்ய வெளிநாட்டு வர்த்தக மந்திரி சந்நிகாலோய் படோலிளெவும் ரஷ்யத் தூதர் அனடோலி டோப்ரினினும் சந்தித்துப் பேசினர்கள். இவர்கள் இருவரும் ரஷ்யாவின் நிபந்தனைகளை நிக்சனிடம் அறிவித்திருக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்றும் ஜப்பான்; ஒலிபரப்பு கூறியது.

பாரிஸ் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட வடவியட்நாம் தூதுக்குழுவின் தலைவர் சுவான் துவே மாஸ்கோ வழியாக வட வியட்நாம் சென்ருர். அப்போது சுவான் துவே ரஷ்யப் பிரதமர் கோசிசினை சந்தித்துப் பேசினர். ரஷ்யா மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகளை அப்போது சுவான் துவேயிடம் கோசிசின் விளக்கினர். என்றும் ஜப்பான் ஒலிபரப்பு கூறியது. எனவே, நிக்சன் கென்னடி போல ராஜதந்திரம் உடையவரும் அல்ல;—அறிவாற்றல் மிக்கவரும் அல்ல என்பதைக் கண்டு உலகம் சிரிக்காமல் எப்படி இருக்கமுடியும்?

*

**உலக அரங்கில்**

---

## வாழ்க்கைப் பேருந்து

**( சாலை இளந்திரையன் )**

வையம் என்பது கடலல்ல,
வாழ்க்கை என்பது படகல்ல;—
வையம் நீடிய தார்ரோடு,—
வாழ்க்கை அதிலோர் பேருந்து!

சாலை அமைப்புச் சரியானல்,
நம்வாழ் வெல்லாம் கொண்டாட்டம்;
சாலை நொடிகள் மிகுந்தாலோ,
நாளும் நாமும் திண்டாட்டம்!

நாற்கால் வண்டி குலுங்காது;—
நடையில் குடையும் சாயாது!
நாற்கால் முக்கால் ஆனலோ,
நடையே இல்லை, கிடைதானே!

கல்லைப் பரப்பும் மதவாதம்
காலைப் பிடித்த திமிர்வாதம்!
பல்லைக் கழற்ற அதுபோதும்;—
பாப்பா வாக்கிச் சதுராடும்!

கல்விக் காலைச் சரிசெய்து
கடமைக் காலை இணைசெய்தே,
எல்லாம் பொதுமை—சமதை எனும்
இருகால் செய்தால் அதுவண்டி!

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 21—5—72 | இதழ் 45

# விடிவெள்ளி தோன்றும் நாள்....?

சென்ற கிழமை, இந்திய எல்லையில், போர் நிறுத்த உடன்பாட்டை மீறி, பாகிஸ்தானியத் துருப்புக்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கையி லீடுபட்டதன் காரணமாக, இந்தியப் பாதுகாப்புத் துறை, தனது இராணுவத் தலைமைக்கு ஆக்கிரமிப்பை முறியடிக்க எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி உத்திரவு அனுப்பி இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், பாகிஸ்தான் அதிபர் புட்டோவும் அடுத்த திங்கள் இறுதியில் சந்திக்கவும், சந்திப்பின்போது நிலையான சமாதானத்துக்கான பேச்சு வார்த்தைகளை நடத்தவும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், பாகிஸ்தான் எல்லைப் படையினரின் அத்து மீறல்கள் மூலம், இந்திய அரசின் ஆத்திரத்தைக் கிளறிவிடப் பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பினை முறியடித்து, படைத் திமிரை ஒடுக்கித் தீரவேண்டு மென்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க இடமில்லை. ஆனால், சமாதானத்துக்கான பேச்சுக்களுக்குத் தோது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அத்து மீறல் நடவடிக்கைகள் எவருக்கும் ஆத்திரத்தை உண்டாக்கத்தான் செய்யும்.

வலுவில் திணிக்கப்படும் இந்த ஆத்திரத்தின் காரணமாக, சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப் படாது என்பதற்கும், இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் உறுதி அளித்திருக்கிறார்.

ஆயினும், சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்தியத் தரப்பில் மட்டுமே ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தால், விளையும் பயன் எதுவும் இருக்க முடியாது. தொடர்புடைய பாகிஸ்தான் அரசும், அந்தரங்க சுத்தியான காரியங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

போரில் தோற்றுப்போன ஆத்திரம் பாகிஸ்தானுக்கு இருக்கும் என்றாலும், அதன் எதிரொலியாகச் செய்யப்படும் சில்லறை விஷமங்கள், நிலையான சமாதானத்துக்குக் கேடுண்டாக்கி விடத் தக்கனவாக அமைந்து விடக்கூடும்.

தனது நாட்டில் உண்மையான சமாதானமும், அமைதி வாழ்க்கையும் உண்டாக வேண்டும் என்பதில் மிகுதியும் அக்கறை கொண்டவராக பாக் அதிபர் புட்டோ இருப்பாரேயானால், எல்லைப் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விஷமச் செயல்களைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை அவர் உடனடியாக மேற்கொண்டாக வேண்டும்.

சிறு சிறு பொறிகளாகக் கனன்றுதான், தீயாகப் பற்றிக் கொண்டது இந்த ஆண்டின் துவக்கத்தில் என்பதும், அந்தத் தீச்சுவாலையின் வேகத்தில் "கிழக்குப் பாகிஸ்தான்" என்ற பகுதியே வரலாற்றையும், வரை படத்தையும் விட்டு அப்புறப்படுத்தப்பட்டு விட்டது என்பதையும் புட்டோ மறந்து விடுவதற்கில்லை

இந்த எடுத்துக்காட்டின் மூலம், எஞ்சிய பாகிஸ்தானையும் இந்தியா அழித்துவிட வேண்டும் என்று பொருளல்ல; அவ்வாறான பொருளை விமர்சனம் செய்வதும் தவறானதாகும்.

ஆனால், எஞ்சிய பாகிஸ்தானின் அமைதி வாழ்க்கைக்கு உத்திரவாதம் தரவேண்டியவர் அதிபர் புட்டோ மட்டும்தான். அதனால்தான் அவர் உடனடியாக எல்லையில் நடைபெறும் கொடுமைகளுக்கும், அத்து மீறல்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்கிறோம்.

உருப்படியான நடவடிக்கைகளை விட்டு விட்டு, தன் நாட்டு மக்களது கண்களையும், கருத்தையும் மறைத்துத் திரையிட முயலும் போக்கில், ஒரு பக்கம் சமாதானப் பேச்சு வார்த்தை என்று பேசிக் கொண்டே, மறுபக்கம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலீடுபட்டுக் கொண்டிருப்பது என்பது ஏமாற்று வித்தை என்றே கருதப்படும்.

பாகிஸ்தான் எல்லைப் படையினரின் ஆக்கிரமிப்புச் செய்திகள் வந்துகொண்டிருக்கும் வேளையிலேயே, பாக் அரசு, படை பலப் பெருக்கத்தி லீடுயட்டுக் கொண்டிருக்கும் செய்தியும் அரசியல் பார்வையாளர்களது கண்களில் பட்டுக்கொண்டுதா னிருக்கிறது.

போரில் தோற்ற ஒரு நாடு படைபலத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் நோக்கத்தில் எவரும் களங்கம் கற்பிக்க முடியாது. ஆனால் உள்நாட்டின் அமைதி வாழ்க்கைக்கு என்று படைபலம் பெருக்கப் படுகிறதா என்றே பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில் ஐயம் ஏற்படுகிறது.

இந்த ஐயம், பொய்யானது; தவறானது; தேவையற்றது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டியவர் புட்டோதான்! அந்த நிரூபணங்கள், ஆக்கிரமிப்புக்களாக, அத்து மீறல்களாக இருக்கமுடியாது; கூடாது என்பதையும் விளக்கியாக வேண்டும்.

என்றாலும், புட்டோ இவை பற்றி யெல்லாம் எண்ணிப் பார்த்துச் செயல்பட்டாலும், படாவிட்டாலும், உலகத்தின் சமாதானத்துக்கும், உள்நாட்டின் சமாதானத்துக்கும் உகந்த எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொண்டிருக்கிறது என்பது ஆறுதல் தரக்கூடியதாகும்.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் புதிய உத்திரவு, இந்த நம்பிக்கைக்கு முரண்பட்டது போல தோன்றினாலும், உண்மையில் அவசியமானது என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே, பாக் அதிபர் புட்டோ, இந்த உத்திரவையே எடுத்துக் காட்டி, சமாதான உடன்பாட்டுக்கு வர மறுத்துவிட்டால்கூட ஆச்சர்யப்பட ஏதுமில்லை. எனினும், அவர் அவ்வாறு மறுத்துவிடக் கூடும் என்ற நம்பிக்கையை, பாகிஸ்தானின் உள் நாட்டு விவகாரங்கள் நமக்கு அளிக்கவில்லை.

எனவே, எல்லையில் என்ன நடந்தாலும் அவை தற்காலிகமானவை என்ற கருத்தில், நீடித்த நிலைத்த சமாதானத்துக்கான விடிவெள்ளி தோன்றும் அந்த நந்நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்போம்!

—திருவாரூர் - முத்துராமன்.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயம் அந்த ஓட்டல் டேபிளின் முன்பு அவருக்குத் தோன்றியது. "கண் முன்பாகவே ஒரு குடும்பத்தைக் கெடுத்த என் எழுத்து இதுவரை எத்தனை நல்ல குடும்பத்தினரை அழித்திருக்கும் — சமூகத்தையே அல்லவா பாழ்அடித்து விட்டேன் பாவி நான்!" என்று அவர் புலம்பினர்.

அந்தப் புலம்பல் முடியு முன்னமே அவரது அடுத்த படத்துக் கதாநாயகியான ராமி அவர் தோளில் ஒட்டிக்கொண்டு கொஞ்சினள். பணியாள் மதுவைக் கொண்டுவந்து நீட்டினன். இரண்டிலும் இன்பமாக மூழ்கத் தொடங்கினர் ஜில் ஜில்.

* * *

இதற்கு அப்புறமாவது ஜில் ஜில் திருந்தி நல்லவிதமாக எழுதத் தொடங்குவாரா' என்று கேட்கிறீர்களா, சார்?...யார் கண்டார்கள்? அடுத்த 'தாசானுதாசர்' இதழில் 'ஓட்டலுக்குப் போன ஒய்யாரி' தொடர்கதை வருகிறதா இல்லையா என்பதைப் பார்த்துத் தான் சொல்ல வேண்டும்!

"நாய் வால் நிமிரும்' என்று சொல்கிறீர்கள்?... நீங்கள் சரியான அப்பாவிதான் போங்க, சார்!...

★

# சூளுரைத்தெழுவீர்!

— பாவலர். எழிற்கோவன் —

★

எந்தமிழர் சீருயர்த்தும் ஏறுனராய்ப் பாவிடுத்த
செந்தமிழின் பாவேந்தர் சாகவில்லை; செம்மலவர்
நொந்தளித்த தொண்டுலகின் நோக்கறிந்த நந்தமிழர்
வந்தனையின் வேந்தரென வையமெலாம் வாழ்கின்றார்!

பாவேந்தர் போன்றபலர் பங்குழைப்பின் நற்பயனாய்
பூவேந்தி யாள்கின்ற பூந்தமிழைக் காண்கின்றோம்!
காவேந்தித் தோள்சிலிர்த்த காவியத்தார் அன்னாரின்
நோவேந்திக் கண்டறிந்த நோக்கரசுள் நிற்கின்றோம்!

இன்றானல் நம்மொழியின் இன்னலத்தைப் பேணாதோர்
நின்றாக்கும் வீணான நிந்தனைகள் நீதியாமோ?
இன்றமிழீர்! சிந்திப்பீர்! எந்தமிழைக் காத்திடுவீர்!
வென்றழிப்பீர்! செந்தமிழீர்! வெங்கொடுமை நரியவரே!

பொங்குதமிழ் சீர்மணக்கும் பொற்குறளின் தோற்றங்கள்!
எங்கெங்கும் யாமறிந்த எந்தமிழ்ச்சொல் லலுவகங்கள்!
செங்கரும்பா யினிக்கின்ற செம்மைச் செயல்வளங்கள்!
தங்குமிவை யத்தனையுந் தந்தவர்யார்? சற்றுணர்வீர்!

பாவியரின் நெஞ்சதுவும் பண்பறிந்து போற்றுகின்ற
காவியமாய் நாம்காணும் காப்பறிஞர் அண்ணாதம்
பாவியமாய்க் கண்டறிந்த பாங்குதமிழ்த் தாயிவள்நம்
ஆவிபொருள் யாவையுமாய் அணைத்தேற்றல் நம்கடமை!

செந்தமிழீர்! தூங்காதீர்! செந்தமிழைக் கொல்லாதீர்!
நொந்தெழுவீர்! நும்மொழியை காக்கின்றநோக்கெடுப்பீர்
தந்திரத்தார் வேரறுக்கத் தக்கநிலை சூளுரைப்பீர்!
செந்தமிழே நினருள சேர்ந்தொருங்கே மூண்டெழுவீர்!

★

# காவியக் கனல்

புலவர் அரிமதி தென்னகன்

## வேண்டுகோள் !

நண்பர்களே ! இக் கட்டுரைத் தொடர் ‘இராவண காவியம்’ காட்டும் எழுச்சியை, இனவுணர்வை, பகுத்தறிவு நெறியை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்னும் நோக்கத்தோடு எழுதப்பெறுவ தாகும். இந்த என் நோக்கம் வெற்றிபெற, இக் கட்டுரைத் தொடர் ‘இப்படி எழுதப் பெற்றுல் நல்லது’, ‘இம்முறையில் எழுதப் பெறவேண்டும்’ என்று நண்பர்களின் நல்லுரையைப் பெரிதும் விரும்புகிறேன். அருள் கூர்ந்து ஆகும் அஞ்சல் செலவுபற்றி ஆய்வு செய்யாமல் நண்பர்கள் தங்கள் எண்ணங்களை ஆலோசனைகளாகவும், ஆணைகளாகவும் அறிவிக்க வேண்டுகிறேன். என் திறமையைக் காட்டவேண்டும் என்பதற்காக இக் கட்டுரைத் தொடர் எழுதப்படாமல், எல்லோர்க்கும் பயனளிக்கவேண்டும் என்பதற்காகவே எழுதப் பெறுவதால் இன்றே மடலை ஏவி விடுங்கள் !!

தொடர்புக்கு :

56, சுந்தர மேத்திரித் தெரு, குயவர்பாளையம்,
புதுச்சேரி - 1.

### 1. காணிக்கை !

நானும் தொடர் கட்டுரை எழுதப்போகிறேன்... ...!! என் வாழ்வில் இதைவிட வியப்பான செய்தியை நான் இன்றுவரை கேட்டதில்லை; இது வெற்றுப்பேச்சல்ல; விளக்கமுடியா உண்மை!

நான் எழுதவிருக்கும் கட்டுரைத் தொடர் எந்த ஏட்டில் எழுதப்படவிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன், வியப்பு விரிவடைகிறது; இனிப்பு எல்லையை மீறுகிறது; அவ்வளவேன்!! பிடிபடமுடியாப் பெருமை என் உள்ளத்தை ஆட்கொள்ளுகிறது. அதோ ! அறிஞர் அண்ணுவின் புன்னகை பூத்த முகம் என் கண்களுக்குள் காட்சியாகிறது; “பணிவு, பண்பாடு” என்று நாளும் முழக்கிய அந்த நல்லவரின் உதடுகளைப் பார்க்கிறேன்; “அடக்கம்...அடக்கம்” என்று அசையும் அந்த உதடுகளின் பிளவினைத் திருக்குறள் பக்கங்களின் திருப்பாக எண்ணு கிறேன்; அடக்கம் என்னை ஆட்கொள்கிறது!! ஆனுலும் குறள் நெறியின் வாழும் இலக்கியமாக வாழ்ந்த அண்ணனின் ஏட்டில், அவர் தொட்டு மகிழ்ந்த இதழில், அவர் கட்டிக் காத்த ‘காஞ்சி’ யில் தொடர் கட்டுரை எழுதப் போகிறேன் என்பதை எண்ணும் போது என்னையே மறக்கிறேன்.

இதை மறதி என்பதைவிட மயக்கம் என்பதே பொருத்த மாகும். இந்த மயக்கம், பிள்ளைக்குப் பாலூட்டும் தாயா னவள் பெறும் மயக்கத்தைப் போன்றது; காதலனின் அணைப்புக்குள் காற்றுக்குப் பகையான கன்னியின் மயக்கத் திற்கிணையானது!!

எழுதவிருக்கும் கட்டுரைத் தொடர் ‘இராவண காவியம்’ பற்றியதாகும் என்னும் நினைவு, என் மனக் கடலுள் மூழ்கி வரும் காலைக் கதிரவன்போல் தோன்றுகிறது; அவ்வளவுதான்!! மயக் கமும் நானும் எண்ணும் தனித்தனி நிலை தகர்க்கப்படுகிறது. ஆம்! ஒன்றில் ஒன்று என்பது மாறி ‘ஒன்றுள் ஒன்று’ என்பார் களே, அதற்கு நானே உவமையாகிறேன்.

கடமையைச் செய்வதில் களிப்பா? என்று என்னையே கேட் டுக் கொள்ளுகிறேன்; கடமை நிற்கிறது; களிப்பு மறைகிறது; என்றுலும், ஒருசிறு மணித்துளி நேரமாவது என் சிந்தையெனும் வண்டு, இன்பச் செந்தேனுண்டு மயங்கியது என்றுல், அதற்குக் காரணமான தூய உள்ளத்தை எண்ணுகிறேன்; ‘எவனே ஒருவன்’ என்றிருந்த என்னை, ‘இவனும் ஒருவன்’ என்றுக்கிய அந்தப் பரந்த உள்ளத்தை நன்றியுணர்வோடு பார்க்கிறேன்; ‘இவரும் ஒரு எழுத்தாளர்’ என்று என்னை மற்றவர்க்கு அறிமுகப்படுத்தும் நண்பர்களின் மகிழ்ச்சிக்குக் காரணமான அந்தக் கலங்கரை விளக்கத்தை நினைக்கின்றேன்; கண்கள் பனிக்கின்றன; இரண்டொரு நீர்த் துளிகள் முத்துக்களா கின்றன. அந்த நன்றி முத்துக்களை, இவர்தான் என்று பெயர்கூற முடியாத அந்த பண்பின் பெட்டகத்திற்குக் காணிக்கையாக்குகிறேன்.

தான் பெற்ற முதற் பிள்ளையைத் தன் வாழ்வுக்கு வழி காட்டியவரின் கால்களிலிட்டு வாழ்த்துங்கள் என்பது தமிழ் மரபு.

ஆம்! இக்கட்டுரைத் தொடர் நான் பெற்ற முதற் பிள்ளை!!

என் எழுத்துத் துறையில் பூத்த முதல் எழில் மலர்!!

எனக்குக் ‘காஞ்சி’ கொடுத்த முதல் கைவாள்!!

நான் இறங்கிய முதல் பெரிய களம்!!

அவ்வளவேன்!

கொள்கை மகள் எனக்குக் கொடுத்த முதல் முத்தம்!!

எனவே, குறைகள் இருக்கலாம்;

சுட்டிக் காட்டுக என வேண்டி கட் டுரையைத் தொடங்கு கிறேன்.

## இலக்கியம்

## 2. முன்னுரை

காலத்தால் புதையுண்ட மொகஞ்சதாரோ, அரப்பா போன்ற நகரங்கள் புதைபொருள் ஆராய்ச்சி அறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டு வரலாற்றுக்கான ஆதாரங்கள் என்னும் வாய்ப்பினை இன்று பெறுவதைக் காண்கிறோம். ஆம்! இராவண காவியமும் 25 ஆண்டுகட்குமுன் காலத்தால் அல்ல, காழ்ப்பு நெஞ்சினரால் புதைக்கப்பெற்றதுதான்! ஆனால், இன்று 23 ஆண்டுகட்குப் பிறகு புதிய மெருகோடு புரட்சிப் பொலிவோடு நெஞ்ச மலர் தூவி இராவண காவியம் வரவேற்கப் படுகிறது. யாரால்......? புதிய சமுதாயத்தை உருவாக்கிடத் துடிக்கும் புதுமை விரும்பிகளால்!!

15—9—1946-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் ஆராய்ச்சி முன்னுரையுடன் வெளிவந்த இராவண காவியத்தின் வீரத் திருவுலா 2—6—1948-இல் அன்றிருந்த சென்னை ராஜ்ய மந்திரிசபையினரின் கருணை கடாட்சத்தால் தடைசெய்யப்பட்டது. இராமதாசர்களும், விபீடணவீரர்களும், அனுமபுத்திரர்களும், சுக்ரீவச் சூரர்களும் மகிழ்ந்தனர்; முகம் மலர்ந்தனர். ஆம்! தமிழினவுணர்வும், தன்மானச் சிந்தனையும் அன்று தோற்கடிக்கப்பட்டன.

17—5—1971-ஆம் நாள் அண்ணனின் அரசு இராவண வீரனுக்குப் பூட்டப் பெற்ற தடையெனும் விலங்கை தகர்த்தெறிந்தது. சட்டச் சம்மட்டியால் கலைஞரின் கைகள் பொல்லா விலங்கைப் பொடிப்பொடியாக்கின.

அடடா! இடைப்பட்ட இருபத்து மூன்று ஆண்டுகளாக எத்தனையெத்தனை கனவுகளைக் கண்டோம்! என்னென்ன கற்பனைகளில் மிதந்தோம். களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன், தலைவியைச் சந்திக்கவும், சந்தித்து 'செந்தேனே! சிட்டே' என்றெல்லாம் கொஞ்சி மகிழவும், குலவி இன்புறவும் என்னென்ன பாடுகளைப் பட்டேனே, அத்தனைத் துன்பங்களிலும் ஒன்று கூடக் குறையாமல் இராவண காவியத்தைக் கண்ணால் காண, கைகளால் தொட, அட்டையைப் புரட்ட, அடுத்தப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்க, ஒரே ஒரு பாடலைப் படிக்க...அப்பப்பா...நாம் பட்ட துன்பங்களை எண்ணிப் பார்க்கிறோம்.

இராவண காவியத்திற்கும் நமக்கும் ஏற்பட்ட காதல் 23 ஆண்டுகள் களவுவாழ்க்கையாகவே நின்று இன்று கற்புவாழ்க்கையாக மலர்ந்துள்ளது.

யாரோ வருகிறார்களே என்ற அச்சம் இப்போதில்லை. எவனாவது பார்த்துவிட்டால் என்னாகும் என்ற பயம் இப்போதில்லை.

தொடவும், மேலும் தொடரவும் அஞ்சிச் சாகவேண்டிய கொடுமை இப்போதில்லை. தொட, தொடர, துய்க்க, நேரங்கிடைக்கும்போதெல்லாம்நெருங்க இப்போது தடையில்லை; தடுப்பாரும் இல்லை!! ஏன்? இப்போதுகற்புவாழ்க்கையல்லவா நடைபெறுகிறது. இனிமேல், காவியக் கன்னியின் மடியில் காலத்தை மறந்து கிடக்கலாம்! அவளும் நம் மார்பில் அணைத்தும் மறந்து கிடக்கலாம்! அவள் தந்த சுவையினை ஏடு கொண்ட மட்டும் எழுதிக் குவிக்கலாம்; இடங் கண்ட போதெல்லாம் பாடிக்களிக்கலாம்!!

காரணம்.........? களவு வாழ்க்கை முடிந்துவிட்டது!!

காரிருளால் சூரியனும் மறைவதுண்டோ?

கறைச் சேற்றால் தாமரையின் வாசம்போமோ?" என்ற பாவேந்தரின் கூற்றுப்படி எதிர்ப்புக் காரிருளால் காவியச் சூரியன் மறையவில்லை! காழ்ப்புக் கறைச் சேற்றால் காவியத் தாமரையின் மணம் மங்கவில்லை. நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1948 ஜூலை 'மன்றம்' இதழில்,

"உலகில் தடைப்படுத்தப்பட்ட நூல்கள் எல்லாம் ஒரு காலத்தில் மக்களிடையே நடமாடியே தீரும் என்பதும், நடமாடும் பொழுது முன்னைய நிலையைக்காட்டிலும் சிறந்த நிலையில் திகழும் என்பதும் வரலாறு கற்றுக் கொடுக்கும் பாடமாதலால், இராவண காவியம் வீறுடன் நம்மிடம்கொஞ்சும் நாளை' எதிர்நோக்குவோம்!" எனக் குறிப்பிட்டிருந்தவாறு இராவண காவியம் அன்றைய நிலையை விடச் சிறந்த நிலையில் வீறுடன் நம்முடன் கொஞ்சுகிறது.

பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 1948 சூன் 'புதுவாழ்வு' என்னும் இதழில்,

"......எவ்வளவோ ஏடுகள் எவ்வளவோ நாடுகளில் பறிமுதல் செய்யப்பட்டு அவையெல்லாம் இன்று உரிமையோடு திகழ்வது மட்டுமல்ல, புகழ்பெற்றும் விளங்குகின்றன. அவ்வாறே புலவர் குழந்தையின் இலக்கியத்தின் புகழ்வளர இருப்பதால்தான் போலும் அரசாங்கம் அதனைப் பறிமுதல் செய்துள்ளது" எனக் குறிப்பிட்டிருந்தவாறு, இன்று இராவண காவியம் உரிமை பெற்றும், உயர்ந்த பெருமை பெற்றும் விளங்கி, காவியப் புலவர் குழந்தையின் தொண்டும், திறமையும் கனி குலுங்கும் சோலையாகி அறிவுப் பசி தீர்க்கும் அருமருந்தாகவும் உணர்வு நிழல் கொடுக்கும் குளிர்ந்த நிழலாகவும் காட்சியளிக்கின்றன.

புலவர் — குழந்தை அவர்கள் 'கொங்கிளங்கோ' என்னும் புனைப் பெயரில் 27—11—48 குடியரசு இதழில்,

"தமிழகத்தை ஆளும் வடவராதிக்கத்தின் கீழ் இயன்ற ஒரு கட்சியாட்சியினரால், தமிழ் மக்கள்படிக்கக்கூடாதென, படித்தால் ஆரிய ஆதிக்கம் ஆட்டங் கண்டு விடுமென 1948-இல் இராவண காவியம் தடைசெய்யப்பட்டது.

இவ்வாட்சி யொழிந்து, தமிழகத்தில் தனித் தமிழராட்சி ஏற்படின், இராவண காவியத் தடை நீக்கப்பட்டுத் தமிழ் மக்கள் படிக்க முற்படின், "கம்பராமாயணம் இருக்க, இராவணகாவியம் ஏன்?" என்பது அப்போதுவிளங்கும் என்று கணித்தபடி, தமிழராட்சி...தவறு, தனித் தமிழராட்சி ஏற்பட்டு, இராவண காவியத்தைப் படிக்க முற்பட்டுவிட்டனர். இனி, "கம்பராமாயணம் இருக்க, இராவண காவியம் ஏன்?" என்பதை விளக்கியாக வேண்டும்!!

அடடா! ஒரு ஏழைப் புலவனின் ஏக்கமும், எதிர்காலம் உணரும் கணிப்பும் இருபத்துமூன்றாண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியதைக் கண்ட பிறகு 'மானப் புலவனின் வாக்குப் பொய்க்காது' என்று மலைமேல் நின்று முழக்கலாம்போல் தோன்றுகிறது!!

கால ஓட்டத்திற்கேற்றாற் போல் காவியத்தைச் செய்திருந்தால், புலவர். குழந்தையவர்கள் பொன்னுக்கும், புகழுக்கும் உரியவராகவாழ்ந்திருப்பார். கம்பன் விழாக்களைப் போல், குழந்தை விழாவும் கொடி கட்டிப் பறந்திருக்கும். தெருக்கூத்து 'ஜமாக்'களைப்போல் இன்றிருக்கும் பட்டிமன்ற 'ஜமாக்'கள் குழந்தையின் பாடற் சுவையைக் குழைத்துக் குழைத்துக் கொடுத்திருக்கும். ஆனால், புலவர் குழந்தையவர்கள் ஆயிரத்தோடு ஆயிரத்தொன்று என எண்ணிக்கையைக் கூட்டியிருப்பாரே தவிர ஆயிரத்துள் ஒருவராக, ஒப்பற்றவராக நின்றிருக்கமாட்டார்; இன்று போல் நிமிர்ந்திருக்கமாட்டார்.

ஓடும் ஆற்றில் இன்ப ஓடம் விட்ட நிறம்மாறும் ஒணன்களுக்கு இடையில் எதிர்நீச்சல் புலவராக இருந்ததால்தான் எரிச்சல்காரர்களின் புகைச்சலுக்கு நடுவே குழந்தைப் புலவரால் இராவணகாவியத்தைக் கொடுக்க முடிந்தது.

ஒரே விஞடி எண்ணிப் பாருங்கள்!!

மூவரும், முப்பத்து முக்கோடி தேவரும் நேரில் வந்து "இராவணன் உயர்ந்தவன்" என்று சொன்னல்கூட நம்பாத மூட முட்காடுகள் மூடியிருந்த நாட்டில் இராவணனைப் புகழ்ந்து ஒரு காவியம் படைத்தார் குழந்தைப் புலவர் என்றால் அந்த வீர நெஞ்சத்திற்கு எத்தனை விருதுகள் கொடுத்தாலும் இணையாகுமா?

மக்கள் எதைத் தேவையென்பார்களோ அதைக் கொடுப்பவன் வணிகன். மக்களுக்கு எது தேவையெனக் கருதுகிறனே அதைக் கொடுப்பவனே அறிஞன்; ஆற்றல்மிகு புலவன்! நாட்டில் புலவர்கள் எல்லாம் வணிகர்களாக 'வரவுப் பேரேட்டில்' குறியாக இருந்தபோது குழந்தைப் புலவர் தன்னை 'இழப்புப் பேரேட்டில்' இணைத்துக் கொண்டாரே என்பதை எண்ணிப் பார்க்கும்போது அந்த எஃகு நெஞ்சத்தை வாழ்த்தாமல் இருக்க முடியுமா?

இப்படித் தன்னை இவர் ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்? நோயறிந்து மருந்து கொடுக்கும் நுண்மாண் நுழைபுலம் மிக்க சமுதாய மருத்துவராக இவர் தன்னை மாற்றிக்கொண்டதுதான் காரணம். என்வேதான் இவர் தந்த காவியம் மூட நோயும், மடமைப் பிணியும் கொண்ட சமுதாயத்திற்கு மருந்தாக அமைந்தது. அறிஞர் அண்ணு அவர்கள் தாமளித்த ஆராய்ச்சி முன்னுரையில் இதை மிகமிக அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

"...இந்நூல் பழமைக்குப் பயணச் சீட்டு புதுமைக்கு நுழைவுச் சீட்டு. தன்மான இயக்கத்தார் தமிழ் பகைவர்கள், காவியச்சுவை அறியாதார், கலையுணர்வில்லாதார் என்ற அவமொழியினை அடித்துத் துரத்தும் ஆற்றலாயுதம்: தமிழ் மறுமலர்ச்சியின் தலை சிறந்த நறுமலர்; நெடுநாள் ஆராய்ச்சியும், நுண்ணிய புலமையும், இனப் பற்றும் ஒருங்கமைந்த ஓவியம், தமிழரின் புதுவாழ்வுக்கான போர் முரசு: காவிய உருவில் ஆரியத்தைப் புகுத்திவிட்டோம்; எனவே இது அழிந்துபடாது என்று இறுமாந்திருப்போருக்கு ஓர் அறை கூவல்; தமிழருக்கு உண்மையை உணருமாறு கூறும் ஓர் அன்பழைப்பு; தமிழரசுக்குக் கால்கோள்; விடுதலைக் கீதம்"

அண்ணு அவர்களின் ஒவ்வொரு சொல்லிலும் புதைந்து கிடக்கும் உண்மை, இராவண காவியத்துள் நுழைந்து பார்ப்போருக்கு எளிமையாகப் புரியும்.

இராவண காவியம்...!!

பழமைக்குப் பயணச் சீட்டு;

புதுமைக்கு நுழைவுச் சீட்டு;

தன்மானத் தமிழர்க்கு ஆற்றலாயுதம்;

மறுமலர்ச்சி மலர்;

இனப்பற்று எழிலோவியம்;

புதுவாழ்வுக்குக்கான போர் முரசு;

ஏய்த்துவிட்டோம் என்று இறுமாந்து கிடப்போர்க்கு விடப்பட்ட அறை கூவல்;

நந்தமிழர்க்கு நல்லழைப்பு;

கட்டப்படவிருக்கும் தமிழரசுக்குக் கால்கோள்;

விடுதலைக் கீதம்;

பதினேரு அடைமொழிகளால் இராவண காவியத்தின் கருத்தையும், சிறப்பையும், ஏன்...? இராவண காவியம் எதற்குத் தேவையென்பதற்கான விளக்கத்தையும் சுருக்கமாக அண்ணு சொல்லியுள்ள பாங்கினைக் காவியத்தைப் படித்தவர்களால் நன்கு உணர முடியும்.

இத்தகைய காவியத்தைக் காவியச் சோலை எனலாமா?

காவியக் கடல் என்று போற்றலாமா?

காவிய அமுதம் என்று புகழலாமா?

காவியத் தேன் என்று பாராட்டலாமா?

காவியப் பொய்கை என்று சீராட்டலாமா?

இராவண காவியம் இராமாயணமாக இருந்தால் சுவையென்னும் முத்துக் கடலாக எண்ணித் தேடித் தேடித் திண்டாடலாம்!!

இன்பமெனும் அமுதத்தைக் கடைந்து கடைந்து நாடி ஏமாறலாம்!!

நயம் என்னும் தேனைக் குடித்து அறிவு மயங்கி முடமாகலாம்!!

உவமை, உருவகம், உள்ளுறை என்னும் பூக்கள் மலர்ந்துள்ள பொய்கையாக எண்ணி இறங்கி, மறைந்து கிடக்கும் சேற்றில் மாட்டிக்கொண்டு விழிக்கலாம்!!

ஆனல்...?

இராவண காவியம்,

மூடக் கருத் திருட்டினை ஓட்டும் முத்துச் சுடர்!

பொய்மை பழிக்கும் உண்மைத் தீ!

புறநானூற்றைப் படைக்கும் புரட்சித் தீ!

பழமையை வேரறுக்கும் புதுமைத் தீ!

உறக்கத்தை விரட்டும் உணர்வுத் தீ!

ஏமாற்றுவோர்க்கு எதிர்ப்புத் தீ!

ஏமாந்தோர்க்கு எழுச்சித் தீ!

இத்தனைத் தீக்களும், இலை மறைவு காய் மறைவாக இருக்கின்ற காரணத்தால்தான் பகுத்தறிவாளர்க்கும், இன வுணர்வு அரிமாக்களுக்கும் இராவண காவியம் கனலாகக் காட்சி தருகிறது: கனலே காவியமாக உருவெடுத்ததாகத் தெரிகிறது!! இது குறித்து அடுத்தடுத்து ஆராய்வோம்.

---

அண்ணுநகர்

## குடிசைவாசிகள் மன்றம்

அண்ணுநகர், ஓரிக்கை (அஞ்சல்), காஞ்சிபுரம் வட்டம்.

★

### நன்றி நவிலல்

அன்புடையீர்,

கடந்த 4-5-'72 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெற்ற குடிநீர்க் குழாய் திறப்பு விழாவின்போது, பொதுமக்களின் நலனே கருத்தில் கொண்டு மிகவும் அரும்பாடுபட்டு குழாய் அமைவதற்கே மூலகாரணமாயிருந்த காஞ்சி நகராட்சித் தலைவர் திருமிகு. K.T.S. மணி அவர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய தீர்மானம் மூலம் மனமுவந்து ஆதரவு அளித்த தலைவர் திருமிகு. K. M. இராசகோபால் M. L. A., அவர்களுக்கும், இக்குழாயினைத் திறந்து வைத்த ஓரிக்கை ஊராட்சித் தலைவர் திரு. சி. தா. பொன்னுசாமி அவர்களுக்கும் நகராட்சி ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிமன்ற அங்கத்தினர்களுக்கும் எங்களது உளங் கனிந்த நன்றியும், வணக்கமும் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

இங்ஙனம்,

| | | |
|---|---|---|
| அ. இருசப்பன் | நு. சாமிநாதன் | ரா. வீரபத்ரன் |
| தலைவர். | செயலர். | பொருளாளர். |

மற்றும் மன்ற நிர்வாக அங்கத்தினர்கள்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# நாய் வால் நிமிருமா?

( ஜே. வி. நாதன் )

## 2. ஓட்டலுக்குப் போன ஒய்யாரி!

ஜில் ஜில் யோசித்தார். பிறகு "ஒரு ஐடியா..." என்று ஆரம்பித்தார். கவிஞர் 'என்ன?' என்று துள்ளிக் குதித்தார்.

"நம்ம பத்திரிகை தாசானுதாசரில் நான் ஒரு தொடர்கதை எழுதப் போறேன்னு விளம்பரம் செய்து வர்றீங்க இல்லையா?... அதை அடுத்த இதழிலிருந்து எழுத ஆரம்பிச்சுடலாம். இந்தப் பாரியைத் திட்டி, மட்டம் தட்டி எவ்வளவு இறக்கி எழுதமுடியுமோ அவ்வளவு மட்டமாக எழுதறேன். ஓட்டலுக்கு அவன் வந்து குடிச்சிட்டுக் கூத்தடிக்கிறாப் போலேயும். அவனைத் தேடிகிட்டு ஒரு பொண்ணு வர்றாப்பிலேயும்—அவளோட அவன் டான்ஸ்' ஆடறாப் போலேயும்—கடைசியா அவனைப் போலீஸ் வந்து புடிக்கற மாதிரியும் எழுதப் போறேன். தொடர் கதைக்குப் பெயர் என்ன தெரியுமா?...'ஓட்டலுக்குப் போன ஒய்யாரி!—' எப்படி?

"தோழரே, ரொம்ப நல்ல ஐடியா! அப்படியே எழுதும்! ஆனா, பாரின்னு அவன் பேரையே போட்டுக் கதை எழுதினால் அவன் ரசிகனுங்க நம்ம முதுகை வீங்க வெச்சிடுவானுங்களே..."

ஜில் ஜில் சிரித்தார்.

"அவன் பேரைப் போட்டாத் தானே? பாரிங்கற பேரை மாத்தி கீரின்னு போட்டுடுவோம். அப்போ எவன் என்ன பண்ண முடியுமாம்?"

"நல்ல ஐடியாதான்...இந்த ஓட்டலுக்குப் போன ஒய்யாரி கதையில் நிறைய 'செக்ஸ்' விஷயங்கள் வந்தாகணும். இல்லாட்டி நம்ப பத்திரிகை சர்க்குலேஷன் படுத்துடும்...!!

"அதை நீங்க சொல்லணுமா? செக்ஸ் இல்லாம எழுத என் 'பச்சை'ப் பேனாவுக்குத் தெரியாதே, ஓட்டலுக்குப் போன ஒய்யாரி கதை வரிக்கு வரி செக்ஸ்தான்! முதல் அத்தியாயத்திலேயே ஒரு நடனம் ஆடற பொண்ணை துகிலுரிச்சி நிறுத்தி தொடரும்னு போட்டுடப் போறேன். எப்படி சஸ்பென்ஸ்?

"ஆகா ... ஆகா......பிரமாதம்! நானும் நம்ம பத்திரிகையை டுலாக்ஸ் பிரிண்ட் பண்ணிடப் போறேன்—உங்க கதையைப் படிக்கணும். அதிலே செக்ஸ் விளையாடறதைப் பார்த்து ஒவ்வொருத்தனும் நாலைஞ்சு பிரதி வாங்கி அவனோட ஒவ்வொரு காதலிக்குமா டிஸ்ட்ரிபூட் பண்ணுவான். எப்படியோ நம்ம பத்திரிகையும் வித்து பாரியையும் திட்டினாச் சரி!..."

கவிஞருக்கு அளவு மீறிய மகிழ்ச்சி. பக்கத்திலிருந்த மதுப் புட்டியைத் திறந்தார். கடக்... கடக்...

எழுத்தாளர் ஜில் ஜில் கவிஞர் அறையிலிருந்து வெளியே வந்தார். அவருடைய தோளில் தொங்கியபடியே தொடர்ந்தாள், 'எதுக்காகச் சிரிச்சான்' படத்துக் கதாநாயகி சந்திரமதி. ஓட்டல் சொர்க்கத்தின் மாடிப் படிகளில் ஜில் ஜில் இறங்கிக் கொண்டிருக்கும்போது-

சந்திரமதி ஜில்ஜில்லின் தோளில் நெருக்கமாய் சாய்ந்துகொண்டு வந்த நேரத்தில் அவர் யாரை நிச்சயமாய் எதிர்பார்க்கவில்லையோ, அவள் எதிர்ப்பட்டாள்! ஜில் ஜில் திடுக்கிட்டு நின்றுவிட்டார். 'இவள் பொல்லாத வம்புக்காரியாயிற்றே, 'இவளிடமிருந்து எப்படித் தப்புவது?'...

"சந்திரமதி! என் பேனாவைக் கவிஞர் ரூமின் அருகில் கீழே எங்கேயோ தவறவிட்டுட்டேன் போலிருக்கு. கொஞ்சம் பார்த்துட்டு வர்றயா டியர்...ப்ளீஸ் ஹெல்ப் மீ!" என்று அவளிடம் எழுத்தாளர் கெஞ்சவும் "இதோ, ஒன் மினிட்!" என்று அவள் ஓடினாள்.

அவள் தலை மறைந்ததும் அப்பாடா என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு "ஹலோ டியர் ஸ்ரீ! ஹவ் டூயூடு?" என்றபடி படிகளில் எதிர்ப்பட்ட மங்கையைக் கேட்டபடி நெருங்கி அவள் இடையில் கையைப் போட்டு வளைத்துக் கொண்டார். ஜில் ஜில் 'எதுக்காகச் சிரிச்சாள்' படம் எடுக்கும் முன்பு 'குப்பாயியைப் போல இன்னொருத்தி' என்று ரியலிசம் ததும்ப ஒரு படம் எடுத்திருந்தார். அதில் ஆப்பம் விற்பவளாகக் கதாநாயகி வருகிறாள். அதற்காக பேட்டை ஆப்பக் கடையிலிருந்த கம்சலையைக் கடத்திக்கொண்டே வந்துவிட்டார். கம்சலைக்கு ஸ்ரீ என்று சினிமாப் பெயர் சூட்டி சினிமாவிலேயும் நடிக்கவைத்தார் திருவாளர் ஜில் ஜில். "குப்பாயியைப் போல இன்னொருத்தி" படம் மூலையில் முடங்கினதும் ஜில் ஜில்லுக்கு ஸ்ரீ அலுத்துவிட்டாள். 'எதுக்காகச் சிரித்தாள்' படம் எடுக்க ஆரம்பித்தார். அதன்பிறகு சந்திரமதியுடன் சுற்றத்தொடங்கி விட்டார்.

"இன்னா ஜில்லு சார், எங்கே அவளைக் காணோம்?..." சிரித்துக் கொண்டே ஸ்ரீ ஆரம்பித்தாள். "அதெல்லாம் பிறகு பேசிக்கலாம், வா, முதலில் இங்கிருந்து போகலாம்..." என்று அவளை பரபரவென்று இழுத்துக்கொண்டு வெளியேறிக் காரில் ஏறிப் பறந்தார் ஜில் ஜில்.

சந்திரமதி 'ஜில் ஜில்' சாரைக் காணோமென்று ஓட்டல் சொர்க்கத்தில் தவித்துக் கொண்டிருந்தாள்!

* * *

"அத்தான்! இப்படி பாதிராத்திரிக்கு அப்புறம் காரில் குடிச்சுப்புட்டு எவள் எவளோ சினிமாக்காரிகளோட வந்து இறங்கறீங்களே, இது உங்களுக்கே நல்லாயிருக்கா?"

ஜில் ஜில் மனைவியை—தாலி கட்டிய மனைவியை முறைத்துப் பார்த்தார்.

"எது நல்லதுன்னு எனக்குத் தெரியும். நீ உள்ளே போ!" என்று உறுமினார்.

"நீங்க வெளியிலே எப்படி வேணுமின்னாலும் இருங்க. ஆனா இந்த அசிங்கமெல்லாம் வீட்டுக்

சிறுகதை!

குள்ளே வேண்டாம்!" கண்ணீருடன் அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினுள் அவருடைய மனைவி கல்யாணி.

"என் உடம்பு எரியுது. நெஞ்சு பற்றி வேகுது. நீங்க எதையும் லட்சியம் பண்ணுமல் மேலே கூத்தடிக்கிறீங்க ...... சொந்த வீட்டிலேயே பாவி ஒருத்தி கல்லுப் போல இருக்கையிலேயே அக்கிரமம் பண்ணறீங்களே, இது கடவுளுக்கே அடுக்கக்கூடிய காரியமா?..."

அட்டகாசமாகச் சிரித்தார் ஜில் ஜில். பின்னுல் கோல மயிலாய் நின்ற ஸ்ரீயைத் திரும்பிப் பார்த்தார். "உடம்பு எரியுதா? பீரோ நெறைய நான் எழுதின பொஸ்தவம் இருக்கு. அதைப் படி. ஜில்லுனு ஆயிடுவே!......நாங்க வர்ரோம்!" என்று கிண்டலாகக் கூறி விட்டு ஸ்ரீயை இழுத்துக்கொண்டு மாடிப் படி ஏறினுர் ஜில் ஜில்.

கல்யாணி அழுதுகொண்டேயிருந்தாள்.

வெகுநேரத்துக்குப் பின் "அழுது என்ன பயன்? தலைவிதியை யார் என்ன பண்ண முடியும்?..." என்ற படி எழுந்தாள். பீரோவில் தலை நீட்டிக்கொண்டிருந்த தன் கணவன் எழுதிய 'காதல் கொள்ளை' புத்தகத்தை எடுத்தாள். அட்டைப் படமே கண்ணராவியாக இருந்தது!

* * *

காலையில் குளித்துவிட்டு அவசரமாகக் கிளம்பினுர் ஜில் ஜில்.

"அத்தான்! இன்றைக்கு உங்கள் தங்கை ஊரிலிருந்து வருகிறுள் பத்து மணிக்கு ஸ்டேஷனுக்குப் போய் அழைச்சுகிட்டு வரணும்..." என்று நினைவூட்டினுள். கவிஞரின் மனைவி. ஜில் ஜில்லின் கூடப் பிறந்தவள் சாந்தா. சொந்த ஊரான கரிச்சான்பட்டிப் பள்ளிக்கூடத்தில் படித்து முடித்துவிட்டு கல்லூரிப் படிப்பிற்காக அண்ணனைத் தேடி வருகிறுள்.

"சாந்தா வர்ருளா?...சரி சரி!" என்றபடி காரில் ஏறினுர் ஜில் ஜில். அவர் மனம் துள்ளியது. தன்னுடைய ஒரே தங்கையை தாயிடம் வளர்ந்து 'வந்தவள்—கிராமத்து மண்ணிலேயே சாகவேண்டும் என்று கிழம் ஆசைப்பட்டதால் தன் தாயிடமே தங்கையை விட்டுப் படிக்கவைத்தார் ஜில் ஜில் அவளை டாக்டருக்குப் படிக்க வைக்கவேண்டும் என்று கொள்ளை ஆசை ஜில் ஜில்லுக்கு இருந்தது. அவளை வரவேற்க ஆர்வத்துடன் ஸ்டேஷனுக்கு ஓடினுர்.

* * *

'தாசானுதாசர்' பத்திரிகை விற்பனை பிய்த்துக்கொண்டே போயிற்று. சினிமா வுலகில் கவிஞருக்கு மார்க்கெட் 'டல்'லடித்து விட்டாலும் ஜில் ஜில் போன்ற எழுத்தாளர்கள் இருக்கும்வரை அவருடைய பத்திரிகை விற்பனை குறையப் போவதில்லை — என்ற துணிச்சலோடு கவிஞர் ஓட்டல்களும், விதவிதக் கோப்பைகளின் ருசியுமாக பவனி வந்து கொண்டிருந்தார்.

பிரசுரகர்த்தர் கண்ணுயிரம் கவிஞரைப் பயபக்தியுடன் ஒருநாள் அனுகி 'ஓட்டலுக்குப் போன ஒய்யாரி' கதை 'தாசானு தாசரில்' முழுதும் வெளிவந்து முடிந்த பிறகு புத்தகமாகப் போடும் உரிமையைத் தனக்கே தர வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்.

'ஓட்டலுக்குப் போன ஒய்யாரி' கதையில்-குடும்பப் பெண் ஒருத்தி பிரபல திருடன் கிரி என்பவன் மீது ஆசைப் படுகிறுள், அவன் 'நைட்கிளப்' ஒன்றுக்கு தினமும் வருவதாகக் கேள்விப்பட்டு அங்கே செல்கிறுள், மது அருந்துகிறுள். நடனம் ஆடக் கற்றுக் கொள்கிறுள். கிரியைச் சந்திக்கிறுள். இருவரும் கைகோத்து நடனம் ஆடுகிறுர்கள். அச்சமயத்தில் அவள் அவள் மேலாடை அறுத்துக் கொண்டு நழுவுவதாகப் போட்டுத் 'தொடரும்' போட்டிருந்தார் ஜில்ஜில், முதல் அத்தியாயத்தில் ஆரம்பமே படு பிரமாதம்!

'தாசானு தாசரில்' ஓ. போ. ஒய்யாரி முதல் அத்தியாயம் வெளிவந்து ஒருவாரம் கழிந்தது. ஒரு நாள்-இரண்டாம் காட்சி முடிந்து தம் காரில் பவனி வந்து கொண்டிருந்தார் ஜில்ஜில், வழக்கம் போல. இப்போது அவர் பக்கத்தில் தோள்மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தது 'குப்பாயியைப் போல இன்னொருத்தி' படத்துக் கதாநாயகி ஸ்ரீயோ, 'எதுக்காகச் சிரிச்சா'ளில் வரும் சந்திரமதியோ-இல்லை. அவருடைய மூன்றாவது படமான 'குடிகாரக் கோமாளி' (இனிமேல்தான் எடுக்கப் போகிறார்) கதாநாயகி ராமாயியுடன் (சினிமாவுக்கென்று நாகரிகப் பெயர் ஏதும் இன்னும் சூட்டவில்லை. அவர் செல்லமாய் அழைப்பது ராமி என்று.) காரில் வந்து 'ஓட்டல் சொர்க்க'த்தின் முன்பாக இறங்கினார் ஜில்ஜில்,

நடுநிசி. ஊரே உறங்கினாலும் அந்த 'இரவு ஓட்டலில் யாரும் உறங்கிப் பழக்கப்படாதவர்கள். அவர்களுக்கெல்லாம் பகல்தான் இரவு; இரவுதான் பகல்!

மேல்நாட்டு இசை பொங்கி வழிந்தது அங்கே, ஆண்களும் பெண்களும் கட்டிப் பிடித்து நடனம் ஆடிக்கொண்டிருந்தார்கள். ஜில்ஜில் புதுமுகம் ராமிக்கு ட்விஸ்ட் ஆடச் சொல்லிக் கொடுத்து தன்னோடு ஆடவைக்கப் பார்த்தார். ஊஹூம். அவளுக்கும் நடனத்துக்கும் இம்மிகூடப் பொருத்தமேயில்லை! நடனம் அவளைக் கண்டு ஓடியது! எல்லோரும் ஆடிக் கொண்டிருக்கும்போது தான் மட்டும் தனியாய் நிற்பது நிற்பது என்னவோ போலிருந்தது ஜில்ஜில்லுக்கு. அச்சமயம் கவி தாசானுதாசர் ஜில்ஜில்லுக்கு அருகில் குடி மயக்கத்தோடு வந்து உட்கார்ந்தார்.

ஆடவன் ஒருவனுடன் பம்பரம் போல் நடனமாடிக்கொண்டிருந்த மங்கை ஒருத்தி ஆடிக்கொண்டே ஜில்ஜில்லை நெருங்கினாள்-ஆடவனை நிறுத்திவிட்டு ஜில்ஜில்லின் அருகிலிருந்த கவிஞரைக் கேட்டாள்: "ஷல் வீ டான்ஸ்?"-இனிமையாகக் குரல் கொடுத்தாள். அந்தக் குரல்...?

சவுக்கடி பட்டவர்போல் நிமிர்ந்தார் ஜில்ஜில், பொறி கலங்கியது அவருக்கு, அப்படியே சிலையாக நின்றுவிட்டார், தானாடா விட்டாலும் தன் தசையாடும் என்பார்களே, அவர் தசை மட்டுமல்ல உள்ளம், உயிர் எல்லாமே இப்போது கிடுகிடுவென்று ஆடத் தொடங்கியது,

கிராமத்திலிருந்து வந்து கல்லூரியில் இப்போதுதான் அடியெடுத்து வைத்திருக்கும் தன் சொந்தத் தங்கை சாந்தாவை அந்தக்கோலத்தில் பார்த்தபோது ஜில் ஜில்லுக்குப் பேச்சு எழவில்லை.

"அண்ணா! அண்ணிகூட வந்திருக்கிறார்கள் ... அதோ!" என்று கையை நீட்டினாள். அங்கே திரும்பிப் பார்த்தவர் இதயத்தில் யாரோ அணுகுண்டைப் போட்டார்கள், எரிமலையே அவர் மூளைக்குள் வெடித்துச் சிதறியது! அங்கே யாரோ ஒருவனுடன் கைகோர்த்து நடனம் ஆடிக்கொண்டிருந்தாள் அவர் மனைவி! வயிற்றெரிச்சலுடன் ஜில் ஜில் பார்த்துக் கொண்டுதானிருந்தார், எதையும் செய்ய முடியாத நிலையில்! அவர் உடலே தீப்பற்றி எரிவதுபோல உணர்ச்சி! தாலி கட்டிய அவர் மனைவி கல்யாணியும் ஓட்டலுக்கு வருகிறாளா? எப்போது முதல்?...இந்த நடனம் ஆட எங்கிருந்து கற்றாள்? மது கூடக் குடித்திருப்பாள் போலிருக்கிறதே — இதெல்லாம் உண்மை என்றே என்னால் நம்ப முடியவில்லையே!"

இதயம் மறத்துவிட்ட நிலையில் அங்கேயே டேபிளில் சாய்ந்துவிட்டார் எழுத்தாளர் ஜில் ஜில்.

அவர் மனைவியும், தங்கையும் நடனம் முடிந்ததும் அங்கிருந்து வெளியேறினார்கள். தங்கையின் கையில் 'தாசானுதாசர்' பத்திரிகை இருப்பதைக் கண்டார் அவர். எல்லாம் புரிந்துவிட்டது இப்போது! கல்யாணியும், சாந்தாவுமாக தன் அறைக்குள் புகுந்து கொண்டு தான் எழுதிய புத்தகங்களை யெல்லாம் அவர்கள் படித்துக் கொண்டிருந்ததை ஜில் ஜில் நிறையத் தடவை பார்த்திருந்தாரே!

தன்னுடைய எழுத்துக்கு நல்லது செய்யத் தூண்டும் சக்தி ஒன்றைத் தவிர படிப்பவரை நரகத்தில் தள்ளச் செய்யும் வலிமை நிறைய உண்டு என்ற ஞானோ

(4-ஆம் பக்கம் பார்க்க)

## உரைகல்

### "கனிக் குலைகள்"

ஆக்கியோன் : அ. சி. மணியன்

விலை : ரூ. 2-00.

வெளியிட்டோர் :

**கண்மணிப் பதிப்பகம்,**

அம்மையப்பன் (அஞ்சல்),

தஞ்சை மாவட்டம்.

★

நெஞ்சில் பதிந்துள்ள நினைவு ரேகைகளைப் பெயர்த்து இங்கே, இலக்கிய ஓவியம் தீட்டிட பேனாத் தூரிகை பிடித்துள்ளதாகத் தன்னை அறிமுகம் செய்துகொள்ளும் கவிஞர் அ. சி. மணியன் அவர்களின் கவிதைத் தொகுப்பே, "கனிக் குலைகள்" என்னும் இந்நூல். "வணங்கிடும் தெய்வம், அண்ணா அடிமலர் தொழுது" இந்நூலைக் காணிக்கையாக்குகிறார், கவிஞர்.

"நான் வணங்கும் தெய்வம்
நீ தமிழே"

என நற்றமிழ் மீது கொண்ட பற்றுடன் தொடங்குகிறது இந்நூல்.

"வானில் மழைவீடு இல்லாது போனால், வையம் அழும் வீடு ஆகிவிடும்..." என்பனபோன்ற கருத்துக் கனிகள் குலுங்கும் கவிதைத் தருவாக இந் நூலைக் காணுகின்றோம்;

'பள்ளம்' அருமையான ஒரு படைப்பு.

"பூசுமந்து நீமணந்து போனாய் -
போகா
புகழுடம்பு மன்னவனாய் ஆனாய்!"

என்ற அண்ணனைப் போற்றும் நினைவோடு,

"எண்ணத்தால் முதலாளி!
எழுதும் ஏழை"

என்னும் இதயக் குரலோடு கனிக் குலைகளைப் பக்குவமாக நம் பார்வையிலிருந்து அகற்றி, நம் நெஞ்சில் நீங்கா இடம்பெறுகிறார் கவிஞர் அ. சி. மணியன். அன்னாரின் கவிதைத் தொண்டு சிறப்பதாகுக!

— **மணிவேந்தன்,** எம்.ஏ.,

# இராசாசியும், சோசலிசமும்

சுதந்திராக் கட்சியின் பிதாமகர் இராசாசி அவர்கள் சோசலிசத்தைக் குறை கூறும்போது ஒரு முக்கியமான வாதத்தை அடிப்படையாக வைக்கிறார். அதாவது, சோசலிசம் தனி மனிதனின் உழைப்பு ஆர்வத்தை மிகவும் குறைத்து அதனால் ஏற்படுகின்ற பிற இடர்ப்பாடுகளை விளைவிக்கும் என்பதே ஆகும்.

மேல்வாரியாகப் பார்க்குங்கால், அதில் உண்மை இருப்பது போலத் தோன்றினாலும் நுணுகிப் பார்க்கும்போது அது அடிப்பட்டுப் போகும் பத்தாம் பசலி வாதமென்பதும், விலை போகா அழுகிய பழஞ்சரக்கு என்பதும் பக்குவமாய் விளங்கும்.

இனி, அவர் வாதத்தைத் துடைத்தெறிவதற்கு முன்னால், ஒரு கருத்தினை அவர் கூற்றில் நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. அவர்கூட, சோசலிசம் தனி மனித உழைப்பு ஆர்வத்தை மிகவும் குறைக்கும் என்று கூறியுள்ளாரே தவிர, முற்றிலும் அழிக்கும் என்று கூறிவிடவில்லை. ஏனெனில், சோஷலிச முறைகளில் பாய்ந்தோடும் தன்னல மறுப்பு, பொதுநல ஆர்வம், புகழார்வம், நிபுணத்துவ ஆர்வம் (Mastory Motive) பட்டம் - பதவி உயர்வு ஆர்வம், வாழ்வியலைப் பற்றிய புதிய — ஆனால் சரியான கண்ணோட்டம், சமுதாயத்துக்காகப் பாடுபட வேண்டியதன் அவசியம் பற்றிய உண்மை அறிவு போன்றனவும், அவற்றை மீறுவதால் ஏற்படும் சட்ட—பொதுமக்கள் அபிப்பிராய தார்மீக ரீதியான தடங்கல்களும்—தண்டனைகளும் போன்றனவும் தனி மனிதனின் உழைப்பு ஆர்வத்தை அழிக்காமல் தடுக்கும் என்பதால் அவர் அப்படிக் கூறிவிடவில்லை. மேலும், சோசலிச நாடுகளில் இன்று நின்று நிலவும் நியாய ரீதியான வரம்புக்குட்பட்ட வருமான ஏற்றத் தாழ்வுகளும், அவற்றால் ஏற்படக்கூடிய அவர் கணிக்கும் உழைப்பார்வமும் அவரை அப்படிப் பேசவிடவில்லை, ஆகவேதான், அவர் கூட அப்படிக் கூறியுள்ளார், இனி, அவர் கூற்றின் உண்மையைக் காண்போம்.

சோசலிச உண்மையில்கூட உழைக்கும் சக்தியிருந்தும், சரிவர உழைக்காத சோம்பேறிக்கு வயிறாரச் சோறு—உடம்பார உடை—ஓய்வார வீடு-உளமாரப் பொழுது போக்கு வசதிகள் உத்திரவாதம் செய்யப்படவில்லை. எனவே, ஒவ்வொருவனும் 'சரிவர உழைத்தால் தான் தனக்குத்தான் பயன்படுவான்' என்ற நிலை நீங்காதபோது உழைப்பு ஆர்வம் எங்ஙனம் குன்றும்? ஆகவே, குடியாட்சி நாட்டில் கூட சோசலிச முறை எங்ஙனம் வெற்றி பெறாமல் போகும்?

உலகப் பொருளாதார வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால்கூட, முதலாளித்துவ நாடுகளில் உற்பத்திப் பற்றாக்குறை அதிகமான காலங்களையும், நாணய மதிப்பு குறைக்க வேண்டிய நிர்ப்பந்தமான பொருளாதார நெருக்கடிகளையும், முதலாளித்துவ முறைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்த போது பட்டினிச் சாவுகளையும், பஞ்சத்தால் — வறுமையால் ஏற்படும் புரட்சிகளையும் நாம் சந்திக்கிறோம். ஆனால், அதே சமயம் சோசலிச நாடுகளில் (அது எந்த அரசியல் அமைப்பை உடையதாயிருந்தாலும்) அந்நிலை இல்லை என்பதையும் நாம் உணருகிறோம்.

**ஜே. பிரியாத்துரை,** பி.ஏ., பி.டி.,

ஆகவே, உற்பத்திப் பற்றாக்குறை மிதமிஞ்சுவது சோசலிச முறையால் இல்லை என்பதும், முதலாளித்துவ முறையால் ஏற்படக்கூடியது என்பதும் விளங்கக்கூடியது.

மேலும், முதலாளித்துவ முறையால் உற்பத்தி பெருகும் என்ற நம்பிக்கை முதலில் ஆங்கில நாட்டில்தான் ஒரு அமைப்பு ரீதியாக உருவாகியது. அதனை அவர்கள் "லெசபயர் கொள்கை" (Leisseig Faire) என அழைத்தவர். ஆனால் எதிர்பார்த்தவாறு அது உற்பத்தி,யைப் பெருக்கவில்லை. அதற்கு மாறாக உற்பத்தியைஅக்கொள்கை குறைத்தது; இத்தனைக்கும் ஆங்கில நாடுதான் முதன் முதலில் தொழிற் புரட்சி கண்டநாடு. ஆனால், அதே சமயம் அரசாங்க கண்காணிப்புடனும், கட்டுபபாடுகளுடனும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்ட இதர சில நாடுகள் உற்பத்தி — அயல் நாட்டு வாணிபம் போன்ற பலவற்றில் வெற்றி கண்டன. எனவே, அரசாங்கக் கட்டுப்பாடும் அதை வழிமுறையாகக் கொண்டு முன்னேறும் சோசலிச முறைகளும் தான் உற்பத்தியைப் பெருக்கின என்பதும், அரசாங்க தலையீடற்ற முதலாளித்துவ முறை ஆரோக்கிய மற்ற போட்டி—உற்பத்திக் குறைவு ஆகியவற்றை உண்டாக்கின என்பதும் நாம் அறிய வேண்டியனவாகும். உற்பத்திக் குறைவு, பற்றாக்குறை என்பனவெல்லாம் உழைப்பார்வம் குன்றியதன் அறிகுறிதானே. ஆகவே, அவை விளையும் முதலாளித்துவ முறையில் உழைப்பார்வம் குறையத்தானே செய்யும்?

முதலாளித்துவமுறை தனி மனித உழைப்பார்வத்தை வளர்க்கும், உற்பத்தியைப் பெருக்கும் என்றெல்லாம் பிறர் நினைப்பதற்

குக் காரணம். அம்முறையில் இலாபம் ஒரு தனி மனிதனையோ, அல்லது குழுவையோ அடைவதால், அதனை அவன் தலையீடன்றித் துய்க்க முடியுமென்பதால் ஆகும். ஆனால், இந்த இலாபம் ஒரு தனி முதலாளியையோ அல்லது சிறு முதலாளிக் குழுவையோ சேரும்போது உற்பத்தியைப் பெருக்கும் தொழிலாளிகளின் உழைப்பார்வத்தை எப்படித் தூண்டும் என்பதுதான் அறிவுக்குப் பொருத்தமாகப் படவில்லை. மனிதனின் சுயலாப இயல்பின் அடிப்படையில் பிறந்த இந்த முறை, சுரண்டலை வளர்த்து, 'குறைந்த கூலி நிறைந்த வேலை' என்ற எண்ணத்தைப் பெருக்கித் தொழிலாளர்களை வாட்டி வதைக்கும்போது, எப்படி உழைப்பார்வத்தை உண்டாக்கும் என்பதுதான் புதிராக இருக்கின்றது. ஒரு தனி மனிதன் இலாப வேட்கையால் பிறரிடம் வேலை வாங்குவான் என்றால் அதில் கட்டாயமும், கண்காணிப்பும் தானே மிஞ்சும்? அது ஆர்வத்துக்கு விரோதம் தானே? அப்படி இருக்க உழைப்பார்வம் மட்டும் எப்படித் தோன்றும்?

உழைப்பார்வத்தை உண்டாக்காமல், தொழிலாளர்களைச் சுரண்டி வறுமையில் வாட்டுவதாய் முதலாளித்துவ முறைகள் இருந்ததால் தானே தொழிற்சங்கம், வேலை நிறுத்தம் போன்ற அதன் நடவடிக்கைகள், அரசாங்க தொழிலாளர் சட்டங்கள் தோன்றின. முதலாளித்துவ முறை கையாளப்பட்டுத் தோற்றதால் தானே, துன்பத்தைப் பெருக்கியதால்தானே சோசலிச முறைகள் முளைத்தன? எனவே, மீண்டும் செத்து அழுகிவிட்ட முதலாளித்துவ பிணத்துக்குச் சவ்வாது பூசி என்ன பயன்?

ஆனால், சோசலிச முறையில் சில சமயங்களில் உற்பத்தி பெருகாததின் காரணம் உற்பத்திக்குத் தேவைப்படும் இயற்கை வளம் போன்ற மனித சக்திக்கு மீறிய சில விவகாரங்களில் ஏற்பட்ட கோளாறுகளே ஆகும்; சோசலிசத்தில் உண்மை நம்பிக்கையற்றவர்களை உயர்ந்த இடத்தில் இருத்துவது, முழுமையாக அதைப் பின்பற்றாமல் இரண்டுங் கெட்டான் நிலையில் காரிய மாற்றுவது போன்ற சில தவறுகளே ஆகும்.

எனவே, இராசாசியின் முதலாளித்துவ கொள்கையை அதிலுள்ள சுரண்டல், பொருளாதார ஏகாதிபத்யம், ஏற்றத் தாழ்வு, வறுமை, 'பற்றாக்குறை. பட்டினி, புரட்சி, போர், காலனி ஆதிக்கம், அரசியல் அதிகார ஆக்கிரமிப்பு, சமுதாயச் சிக்கல்களின் தோற்றம், வேலைப் பாதுகாப்பு இன்மை, எதிர்காலம் பற்றிய கவலை, பொருள் பதுக்கல் ஆகிய இன்ன பிற இன்னல்களுக்காகமட்டுமின்றி உற்பத்தி ஆர்வத்தை மிக மிகக் குன்றச் செய்வதற்காகவும் அதை நாம் கண்டிக்க வேண்டும்; சோசலிசத் தத்துவத்தை சமத்துவம், வாங்கும் திறன், பொதுநல ஆர்வம் போன்ற இதர நன்மைக்கட்காக மட்டுமல்லாமல் உற்பத்தி ஆர்வத்தைப் பெருக்குவதற்காகவும் அதை நாம் ஆதரிக்க வேண்டும். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பாணியில், 'யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் முழுதும்' என்ற அடிப்படையில் நடைபோடும் அதை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

சோசலிசம் வாழட்டும் — உற்பத்தி பெருகட்டும் — சமதர்மமும் சமத்துவமும் சகல துறைகளிலும் ஓங்கட்டும்.

★


வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல்ட் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

# இளமையின் காதல்!

( காஞ்சி இராசவேலன் )

பொங்கியெழும் பொன்னிநதிக் கரையின் ஓரம்
	புதுவெள்ளப் பெருக்கலைகள் அறையும் நேரம்
தங்கியெழும் தண்ணிலவு மேவும் வேளை
	தரணியெலாம் தளர்வுற்றே ஓயும் மாலை.
நெஞ்சிலெழும் உணர்வலைகள் கொந்த ளிக்க
	நின்றிருந்தேன்; நேர்கண்டேன்; நங்கைநல்லாள்!
வஞ்சியவள் வாள்நுதலாள் வரவா? இல்லை
	வான்மதியே பூவுலகில் உறவே உற்றேன்.

முல்லைமலர் எழில்காட்டும் பூவை வெள்ளை
	முத்துறழும் முறுவலுடன் முகைய விழ்க்க,
கிள்ளியதும் உடன் சிவக்கும் கிள்ளை நாணம்
	கீழ்நோக்கித் தலைசாய்க்க மெல்ல யானும்
துள்ளியமென் இதயத்தின் துடிப்பைச் சொல்ல
	தூயமரை முகத்தாளின் பிடிப்பை யன்ன
மெல்லியலாள் கையணைக்க மலர்ந்த காதல்
	மென்மேலும் தையலுறும் இளமை காதல்.

மாதவியின் நடம்கண்டு மயக்க முற்று
	மயங்கியதன் கூர்விழியில் கிறக்கம் பெற்று
'கோதையவள் கற்புடையாள் உறக்கம் கொல்ல,
	கோவலன்பூம் பட்டினத்தில் கொண்ட காதல்
சீதளமோ என்றெண்ணி ஏங்கும் வேளை
	சித்திரப்பூ வடிவமதி தாங்கும் வாலை
மாதவளின் முன்னேஎன் இளமை காதல்
	மடையவிழ்நீர்ச் சுடிலன்ன வளமை காதல்.

சொல்லழகுப் பெண்ணவளும் சுவையை ஊட்டும்
	செந்தமிழில் பண்ணெழுப்பி நசையைக் கூட்ட,
வில்லழகு இமையிரண்டும் விரிந்து நோக்கி
	விந்தைசெயும் விழியிரண்டும் பரிந்து தேக்கும்
கல்லழகும் கற்சிலையாய்க் கலையைக் காட்ட
	காந்தள்வி ரல்கன்னி காத லூட்டி
இல்லழகுத் தெய்வம்போல் இனிமை சேர்க்க
	இதயத்தை யான்விட்டேன் இளமை ஆர்க்கும்.

அன்றலர்ந்த மலரில்லை; அகத்தைத் தொட்டு
	அமுதூட்டும் அலையில்லை; எழுச்சி இல்லை;
இன்றலர்ந்த மலரானாள்! எந்தன் நெஞ்சின்
	இருள்நீக்கும் ஒளியானாள்; இதுவோ காதல்?
தென்றலினும் மென்மையதோ? இனிக்கும் தேனோ?
	தேமதுரத் தமிழிசையோ? அமுத ஊற்றோ?
மன்றலினை அழைக்கின்றேன் மலரும் காதல்
	மகிழுணர்வை காணத்தான் வளரும் காதல்.

விளங்கிழையாள் விண்ணோக்கி விழும்மூச் செல்லாம்
	விரைந்துடனே மறைப்பெய்ய வேந்தென் உள்ளம்
கலங்கியழும் கதிநீங்கி மாந்தம் கொள்ள
	கருத்தொருமித் தோங்கிவளர் பேதை காதல்
துலங்கியெழும் தூயதமிழ் மறையே யன்ன
	தொடர்வுற்றுக் கிளையெய்தி சுகத்தை யுல்வி
இலங்கியொளிர் காவியத்தை எடுத்துச் சொல்லும்
	இவ்வுலகப் பாவியத்தைப் படித்துச் சொல்லும்.

# இலக்கியம்

இலக்கியம் என்றால் என்ன? என்ற வினாவிற்கு தக்க விடை கூற வேண்டுமெனில் இலக்கியம் தான் கூற எடுத்துக்கொண்டுள்ள பொருளாலும் அதனைக் கூறும் வகையாலும் பொதுத் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். அதாவது அது அனைவருக்கும் இன்பம் ஊட்டுவதாக இருத்தல் வேண்டும். சரித்திரம் என்பவை ஒரு சிலராலேயே கற்பிக்கப்படுகின்றன. அந்த ஒரு சிலரும் இவற்றைக் கற்பதால் அடையும் பயன் ஒன்றைக் கருதிக் கற்கின்றனரேயன்றிப் பயன் கருதாது இன்பம் ஒன்றையே கருதி இவற்றைக் கற்பதில்லை. ஆனால் வேறு பயன் கருதாமல் பெறும் இன்பம் ஒன்றையே பயனாகக் கொண்டு கற்கின்றது. இலக்கியம் தரும் இன்பத்தை முருகியல் இன்பம் என்று தமிழ் அறிஞர் திறனாய்வாளர் அ. ச. ஞானசம்மந்தம் அவர்கள் தாம் எழுதிய ' இலக்கியக் கலை ' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்கள்.

ஒருவன் தன்னுடைய உள்ளத்தில் எழும் கிளர்ச்சிகளைப் பிறனொருவன் உள்ளத்திலும் எழுமாறு செய்ய விரும்பினால் அதற்காக அவன் பயன்படுத்தும் கருவிகளுள் மொழி என்பதும் ஒன்று. மனிதனுடைய உள்ளத்தில் எழும் கிளர்ச்சிகள், கருத்துக்கள் என்றும் இரு வகைப்படும். ஒருவன் மொழியைக்கொண்டு தன்னுடைய கருத்துக்களைப் பிறர் அறிய உண்டாகும் நூல் அறிவு நூலாகும். ஒருவன் மொழியைக்கொண்டு தன் உள்ளத்தில் உண்டான உணர்ச்சிகளைப் பிறர் உள்ளத்திலும் உண்டாகுமாறு செய்விக்கும் நூல் இலக்கியமாகும். இலக்கியம் என்பது படிக்குந்தோறும் நயம் தந்து, உணர்ச்சி வேகத்தோடு உருவ அமைப்பும் உடையதாய் இருத்தல் வேண்டும் என்று தமிழ்க் களஞ்சியம் செப்புகிறது.

ஒருவன் எதையேனும் நேராகவோ அல்லது கற்பனையாகவோ அனுபவித்திருக்கலாம். அதை மீண்டும் கற்பனை மூலம் தன்னுடைய உள்ளத்தில் நினைந்து மறுபடியும் அனுபவிக்கிறான். அந்த அனுபவத்தைப் பிறரும் அடையுமாறு செய்ய விரும்புகிறான். அதற்காக அவன் ஓவியனாயிருந்தால் வண்ணங்களையும், சிற்பியாகஇருந்தால் கல்லையும் உலோகத்தையும், கவிஞனாக இருந்தால் சொற்களையும் பயன்படுத்துவான். ஒருவன் தன் அனுபவத்தை பிறரும் அனுபவிக்கும்படி சொற்களைக் கொண்டு செய்யும் கலையையே இலக்கியம் என்றும் கவிதை என்றும் கூறுவர்.

கவிஞன் சொற்களின் தொனி ஒரு புதிய வாழ்க்கைப் பற்றி நெருங்கிய முறையில் அறியவும் உணரவும் தலைப்படுகிறோம்.

இலக்கியம் வாழ்க்கையில் மனிதர்கள் கண்ட ஆழ்ந்த அனுபவத்தையும் வெளியிடுவதாகவும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நிகழ்ச்சியும் முன்னர் வாழ்ந்த மனிதர்களை எவ்வாறு தாக்கின என்பதையும் அத்தாக்குதலின் போது அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் அறிவிக்கும் அனுபவக் கருவூலங்களையும் ஒலிநயத்தையும் பயன்படுத்தித் தன்னுடைய நோக்கத்தைச் சாதித்துக் கொள்கிறான். சொற்களின் கற்பனை நயமும், சந்தம் முதலிய ஒலிநயமுமே இலக்கியத்தின் உயிர் நாடிகள். அவற்றின் வாயிலாகவே கவிஞனின் அனுபவம் கவிதைப் படிப்பவர் அனுபவமாக ஆகின்றது. 'வாழ்வதற்குவேண்டிய எது நிலைபெற்று இருக்கிறதோ அதுதான் இலக்கியம்'' என்று ஹட்சன் கூறுகிறார்.

இலக்கியவளம் இல்லாத மொழி மலர் பூக்கஇயலாத மலட்டு கொடியாகும். கற்பனையை அறிவிற்குத் துணையாகக் கையாண்டு இன்பத்தை உண்மையோடு இணைத்துக் கூறும் கலையே இலக்கியக் கலையாகும்'' என அறிஞர் ஜான்சன் கருத்துரைக்கின்றார். அறிவே அடிப்படை கற்பனை. அதன் துணை உண்மையே உள்ளீடு; இன்பமே அதன் விளைவு என மற்றொருவர் கூறுகிறார்.

மக்கட் சமுதாயத்தில் ஒருவருள் ஒருவர் கலந்து வாழ்வதால் பொருள் உணர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் உண்டாகும். மக்கள் தம் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பிறருக்கு எடுத்துக்காட்ட விழைவர். பிறருக்கு தம் எண்ணங்களை எடுத்துக் காட்டி கேட்பவர் அவற்றை அறியும்பொழுது தம்மைப் போலவே எண்ணி மகிழ வைத்துப் பார்ப்பதில் சிறந்த இன்பம் தோன்றுகின்றது. இவ்வாறு மக்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் விருப்பமிகுதி இலக்கியத் தோற்றத்திற்கு ஒரு காரணமாகும்.

இல்லது இனியது நல்லது புனைந்துரை எனப் புலவரால் நாட்டப் பெற்ற ஒழுக்கம் நான்கெனச் சான்றோர் கூறியுள்ளனர். கோவை கலம்பகம் போன்ற புனைந்துரை நூல்கள் இதனாலேயே எழுந்தன.'' ''உள்ளத்தை திறப்பதற்கும்அதை திருத்துவதற்கும் புரிந்துகொண்டு படிப்பதை செரிப்பதற்கும் தவறுகளைப் போக்கும் ஆற்றலை உண்டாக்குவதற்கும் நல்லவற்றைமேற்கொள்வதற்கும் பிறர்க்கு எடுத்துரைப்பதற்கும் இலக்கியம் பயன்படல் வேண்டும்'' என கார்டினல் நியுமன் கூறுகிறார்.

கற்றுத் தீரவேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு ஒருவரும் இலக்கியத்தைக் கற்பதில்லை. பிறகு எக்காரணத்தைக் கொண்டு இலக்கியத்தை மக்கள் விரும்புகின்றார் எனின் அது ஆழ்ந்து அகன்று உள்ளதும் என்றும் நிலைபெற்றதுமான மனிதப் பண்புடன் தொடர்புடையதாகலின் மனிதனால் என்றும் விரும்பப்படுவது சிறந்த இலக்கியம். மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து தோன்றுத் தாகலின் அதனைக் கற்கும் நாவ இலக்கியம்.

## இலக்கியத்தின் தோற்றம்

இலக்கியம் தோன்றிய நாள் எது? எனக்கேட்கின் அது மனிதன் சிந்திக்கத் தொடங்கிய அப்பொழுதே இலக்கியம் தோன்றிவிட்டது. மனிதன் மிகுதியும் அறிய விரும்புவது மற்றைய மனிதனைப்பற்றித்தான் என்றால் அது

வித்துவான்

தே. வே. சந்தானம்

புதுமையானது அன்று. காரணம் அவன் சமுதாயமாக கூடி வாழ விரும்பும் ஒரு வகை உயிரினமாவான்.

இலக்கியம் தோன்றக் காரணம் யாவையெனின் பிறருடைய வாழ்க்கை, செயல், அறிவு நினைவு, உணர்ச்சி, உள்ளக் கிடக்கை குறிக்கோள் என்பவற்றை அறிய மனிதனுக்கு இருக்கும் ஆர்வமே இலக்கியம் தோன்றக் காரணமாயிற்று. இலக்கியம் தோன்றுவதற்கு மூலமான காரணத்தை நால்வகைப் படுத்திக் கூறலாம் என மேனாட்டுத் திறனாய்வாளர் கூறுவர். அவை யாவையெனின் 1. தனது கருத்தை வெளியிட வேண்டும் என்று தோன்றும் விருப்பம் 2. பிற மனிதரிடத்தும் செயல்களிடத்தும் நாம் கொண்டுள்ள ஆர்வம் 3. நாம் கண்டு கேட்டு வாழும் இவ்வுலகிலும் கற்பனையால் மட்டும் •உண்டாக்கி மகிழும் கற்பனை உலகில் உள்ள ஆர்வம். 4. எதற்கும் வடிவு கொடுக்கத் தோன்றும் நம்முடைய எண்ணம்.

## இலக்கிய வகை

1. தனி மனிதன் வாழ்வு அனுபவம் என்பவற்றிக் கூறும் இலக்கியம். 2 மனிதன் புற உலகில் ஈடுபட்டு வாழ்ந்த வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகள் பற்றி அறிய முற்பட்ட அனுபவத்தில் அதாவது வாழ்வு, சாவு, குற்றம், நன்மை, தீமை கடவுள் மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு என்பவை பற்றி நினைந்து அனுபவித்து கூறுவது. இவ்வகை அனுபவம் தனி மனிதனின் சொந்தமாக இல்லாமல் மனித சமுதாயம் முழுதுக்கும் பொதுவாக ஆகிறது. 3 மனிதன் தன்னொத்த மனிதனிடம் கூடி வாழும்பொழுது பெறும் அனுபவம். 4 நாம் காணும் உலகில் உள்ள இயற்கை பற்றி அறிவதும் கூறுவதும் ஆகும். 5 மனிதனே ஆக்கிப் படைக்கும் கலை, கற்பனையால் ஆக்கிய கலை, இவ்வகைப் பிரிவினையால் இலக்கியம் முழுவதும் அடங்கிவிடக் காணலாம்:

## இன்ப இலக்கியம்

மேலே குறிப்பிட்ட ஐவகை இலக்கியங்களை இரு பிரிவுகளாக பிரிக்கலாம். அவை பயன் இலக்கியம், இன்ப இலக்கியம் என்பதாம். அவற்றுள் இன்ப இலக்கியத்தை நோக்குவோம். இன்ப இலக்கியத்திற்கு சான்றாக சிலப்பதிகாரத்தைக் கூறலாம். சிலப்பதிகாரத்தில் கலை இருப்பினும், பயன் வேறு தனியாக இல்லை. சிலப்பதிகாரத்தை படிக்கும்பொழுது உண்டாகும் இன்பம் ஒன்றுதான் அதன் பயன், இதையல்லாமல் வேறு பயனையடைய நாம் அதனிடம் செல்வதில்லை. அதனை ஆக்கிய கலை எனும் வேறு பயனை அறிவதிலிருந்து எதிர்பார்க்கச் செய்யவில்லை.

காலஞ்சென்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இலக்கிய பஞ்சகத்தில் சிலப்பதிகாரத்தைப் பற்றி கூறும்போது:-

தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேறும் சிலப்பதிகாரமதை—ஊனிலே
எம்முயிர் உள்ளளவும் நித்தம் ஓதி
உணர்ந்து இன்புறுவோமே.

—என்ற பாடலை ஒப்பிட்டு மகிழற்பாலதாகும்.

## பயன் இலக்கியம்

ஐம்பெருங் காப்பியத்தில் ஒன்றான மணிமேகலையை ஆக்கிய சாத்தன் நமக்கு புத்த தருமத்தை உபதேசிக்க அவ்விலக்கியத்தைக் கருவியாகக் கொள்கிறான். அதனால் மணிமேகலையின் கலைத் தன்மை குறையவில்லையாயினும் அதனைக் கற்றலின் பயன் அதுவேயன்று. நூலின் புறத்தே அமைந்திருத்தலின் அது பயன் இலக்கியம் என்று கூறப்பெறும்.

## இலக்கியத்தின் வித்து

இலக்கியம் படிப்பதற்கு வித்து வாழ்க்கையில்தான் கிடைக்கிறது. வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியோ அன்றிப் பல நிகழ்ச்சிகளோ விதையாக அமைகின்றன. இந்த நிகழ்ச்சியைக் காண்பவர் அல்லது கேட்பவர் அனைவருக்கும் ஒரே மாதிரியான கருத்துத் தோன்றுவதில்லையல்லவா? எனவே இலக்கிய ஆசிரியரின் அறிவும் இத்தகைய ஒரு நிகழ்ச்சியில் ஈடுபட்டு ஒரு வகையில் அதனை அனுபவிக்கிறது. இவ்வனுபவத்தில் அவன் பெறும் உணர்ச்சி எதுவோ அதனை நாமும் பெறுமாறு செய்ய அவன் விரும்புகிறான். பெற்ற உணர்ச்சியைக் கற்பனையுடன் கலந்து பெருக்குகிறான். இன்றேல் அவனது கற்பனை என்ற ஒன்றேதான் இலக்கியம் தோன்ற வழி வகுக்கின்றன. அவன் பெற்ற அவ்வுணர்ச்சி ஒரு வடிவு கொடுத்து அதனை நாமும் அனுபவித்து அவன் பெற்ற உணர்ச்சியை நாமும் பெற வைப்பதே அவன் இயற்றும் இலக்கியத்தின் நோக்கம். இவ்வாறுதான் இலக்கியம் பிறக்கிறது.

## வாழும் இலக்கியம்

நாளுக்கு நாள் நம் மனம் மாறுபாடு அடைவதைக் கண்டு கொண்டுதான் இருக்கிறோம். பத்தாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஒன்று இன்று உலகம் பழமை என்று தள்ளிவிடுகிறது; வெறுக்கவும் முற்படுகிறது. காலையில் வடித்த சோற்றை மாலையில் உண்ண வெறுக்கின்ற இந்த உலகில் சில இலக்கியங்கள் மட்டும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழித்தும் மக்கள் படித்துப் போற்றுவதன் கருத்தென்ன? என்பதற்கு மேனாட்டு திறனாய்வாளர் உயர்திரு. ஹ்யூம் என்பவர் வாழும் இலக்கியத்தைப் பற்றிக் கூறுங்கால் காலாந்தரத்தில், பல்வேறு வகைப்பட்ட மக்கட்கு இன்பம் ஊட்டி அவர்களுடைய 'குறுகியவும் பரந்தவுமான மனநிலைகளுக்கெல்லாம் அழியாமல் நின்று, அவர்களுடைய அறியாமை, பொறாமை முதலியவற்றிலும் அழியாமல் நிற்கின்ற இலக்கியங்களின் பெருமை என்னே' என்று கூறுகிறார்.

மக்களினம் எவ்வளவு வளர்ந்தாலும் மாறினாலும் அடிப்படைத் தன்மை மாறப் போவதில்லை, மக்கள் மாக்களாக மாறுகிறவரை இவ்விலக்கியம் சுவையுடையதாக இருக்கும். மக்களினமே அழிந்தால் ஒழிய உணர்ச்சி பண்புப் போராட்டம் மகிழ்ச்சி துன்பம் என்ற பொதுத் தன்மைகளை அழிக்க இயலாது.

இலக்கியத்தைக் கற்கக்கூடியவர்கள் காய்தல் உவத்தல் இன்றி படித்து அதனைப் போற்றி பாதுகாத்தல் தமிழர்தம் கடனாகும்.

★

# இலட்சத்தை எதிர்பார்ப்போம்



தமிழ்நாடு பரிசுச் சீட்டில் தனககு நிச்சயம் பரிசு கிடைக்கும் என்பதில் பெயின்டர் ராமுவுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை எனவே தமிழ்நாடு பரிசுச் சீட்டை அவன் தொடர்ந்து வாங்கி வருகிருன்!

**இன்றே வாங்குங்கள்**

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

**மொத்தப் பரிசுத் தொகை***

**ரூ. 10,50,000** மொத்த வரிசைகள்: மூன்று

**மொத்த: பரிசுகள் 3198**

## முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

(ஒவ்வொரு வரிசைக்கும்)

**குலுக்கல் நாள்: 31-5-1972**

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்**

*தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 278 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!*

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு, சென்னை-9

*3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது

ஆசிரியர் வெளியீட்டாளர் [illegible] அவர்களால், காஞ்சிபுரம்-
86, திருக்கச்சிநம்பித் தெரு, [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.